


**22. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

- **ஆபரேஷன் சிந்தூர் ராணுவ தாக்குதல்** உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இருஅவைகளும் பிற்பகல் இரண்டு மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

- **குடியரசு துணைத்தலைவர் பதவியிலிருந்து திரு.** ஜக்தீப் தன்கரின் ராஜினாமாவை, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஏற்றுக்கொண்டுள்ளார்.
- **தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து தாம்** தொடர்ந்து ஆய்வு செய்வதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

- **எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக** 4 ராமேஸ்வர மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

- **ஜார்ஜியாவில் ஃபிடே மகளிர் உலக செஸ்** சாம்பியன்பட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் திவ்யா தேஷ்முக், கொனேறு ஹம்பி ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**நாடாளுமன்றம்**

**ஆபரேஷன் சிந்தூர் ராணுவ தாக்குதல், பீஹார்** வாக்களார் பட்டியல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இருஅவைகளும் பிற்பகல் 2 மணி இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்றபோது, இவ்விவகாரங்களை எழுப்பிய எதிர்கட்சிகள் இதுகுறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று முழக்கமிட்டன.

கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்றும், விவசாயம் மற்றும் வேளாண்மை சார்ந்த கேள்விகள் உள்ளதாகவும் மக்களவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா குறிப்பிட்டார்.

விவசாயிகளின் நலன்கருதி எதிர்கட்சி உறுப்பினர்கள் அவை சுமூகமாக செயல்பட ஒத்துழைக்க வேண்டுமென்று வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹானும் வலியுறுத்தினார்.

ஆனால் எதிர்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் அவை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் 2 மணி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது நாடாளுமன்ற விவகாரங்கள் இணையமைச்சர் திரு.அர்ஜுன் ராம் மெஹ்வால் உள்ளிட்டோர் அவை அலுவல்களை நடத்த எதிர்கட்சிகள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதோடு சட்டத்திற்கு உட்பட்டு அனைத்து விவகாரங்கள் குறித்தும் அரசு விவாதிக்க தயாராக இருப்பதாக கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் விவகாரம் குறித்த விவாதத்திற்கு 16 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அவைத்தலைவர் குறிப்பிட்டார்.

ஆனால் அமளி தொடரவே பிற்பகல் 2 மணி வரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சரனை எதிரொலித்ததால் அவை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் பிற்பகல் வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கரின் பதவி விலகல் தொடர்பான உள்துறை அமைச்சகத்தின் அறிவிக்கை மாநிலங்களவையில் இன்று எடுத்துரைக்கப்பட்டது.

முன்னதாக திரு. ஜக்தீப் தன்கரின் ராஜினாமாவை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு ஏற்றுக்கொண்டார்.

குடியரசு துணைத்தலைவர் பதவியை ராஜினாமா செய்த திரு. தன்கர் உடல்நலத்துடன் வாழ பிரதமர் வாழ்த்தியுள்ளார்.

❖❖❖❖❖❖

**மல்லிகார்ஜுன கார்கே**

இதனிடையே பீஹார் வாக்காளர் பட்டியல் விவகார பிரச்சனை குறித்து மக்களவை எதிர்கட்சித்தலைவர் திரு.ராகுல்காந்தி தலைமையில் எதிர்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்ற நுழைவாயிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் இந்த மறுஆய்வின் சட்டத்தன்மை குறித்தும் இதன் நோக்கம் குறித்தும் அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

இந்த சிறப்பு வாக்காளர் பட்டியல் திரும்பப்பெற வேண்டுமென்றும் கோரினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சமாஜ்வாடி, ராஷ்ட்ரிய ஜனதாதள், திரிணமுல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் பங்கேற்றன.

முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், மாநிலங்களவை எதிர்கட்சி தலைவருமான திரு. மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் **INDI** கூட்டணி தலைவர்கள் கூட்டம் இன்று நடைபெற்றது.

மழைக்கால கூட்டத்தொடரில் மேற்கொள்ள வேண்டிய பொதுநிலைப்பாடு குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖

**கே.சி. வேணுகோபால்**

காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. கே.சி. வேணுகோபால் பேசுகையில் பீஹாரில் சிறப்பு வாக்காளர் பட்டியலில் ஆள்சேர்ப்பு பணிகள் நாட்டின் ஜனநாயக மதிப்பீடுகளை உள்ளடக்கிய பிரச்சனையாகும் என்று குறிப்பிட்டார். இதுதொடர்பான விவாதத்தை **INDI** கூட்டணி வலியுறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**கவுரவ் துவேதி**

**செயற்கை நுண்ணறிவு மூலம் செய்தி சார்ந்த எதிர்கால** பிரச்சனைகளுக்கு தீர்வு எட்டுவதற்கான வழிமுறைகள் ஆராயப்படுவதாக பிரசார் பாரதியின் நிர்வாக இயக்குநர் திரு. கவுரவ்துவேதி தெரிவித்துள்ளார்.

கம்போடியாவில் 20-வது ஆசிய ஊடக உச்சிமாநாட்டில் உரையாற்றியஅவர், செய்தி மற்றும் ஒளிபரப்பு நிறுவனங்களை மறுவடிவமைத்து துல்லியமாகவும், விரைவாகவும், நம்பகத்தன்மை கொண்ட செய்திகளை வெளியிட செயற்கை நுண்ணறிவு வழிகோலுவதாக குறிப்பிட்டார்.

தூர்தர்ஷனின் இலவசஅலைவரிசை தளமும், ஆகாஷவாணியின் டிஜிட்டல் தொழில்நுட்பங்களும், நாட்டிலுள்ள அனைத்து குடிமக்களையும் சென்றடைந்து நேர்மையான செய்திகள், கல்வி, பொழுதுபோக்கு போன்றவற்றை கொண்டு சேர்ப்பதாக எடுத்துரைத்தார்.

பிரசார் பாரதியின் **Waves, OTT** சேவை தளம் புதிய மின்னணு கலாச்சார இயக்கத்திற்கு வழிகோலியிருப்பதாகவும் திரு. கவுரவ் துவேதி எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

## GSLV F – 16

**ஸ்ரீஹரி கோட்டா விண்வெளி மையத்திலிருந்து NISAR** புவி கண்காணிப்பு செயற்கைகோள் **GSLV F - 16** ராக்கெட் மூலம் வரும் 30-ம் தேதி மாலை மணி 5.40-க்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

இந்த செயற்கைகோள் 743 கிலோ மீட்டர் உயரத்தில் சூரிய சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது

புவியின் செயல்பாடுகள், தரவுகள, வானிலை நிலவரங்கள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் 12 நாட்களுக்கு ஒருமுறை ஆய்வுசெய்யும் வகையில் நுண்ணிய அதிநவீன தொழில் நுட்பங்களுடன் இந்த செயற்கைகோள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் பொருத்தப்பட்டுள்ள **L - Band** ரக ரேடார் அடர்ந்த காடுகளுக்குள்ளும், நில தாவரங்களுக்கிடையேயும் ஊடுருவி அவற்றின் தன்மையை ஆய்வுசெய்யும் திறன்படைத்ததாகும்.

**Sweep SAR** என்ற அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிசார் செயற்கைகோள் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளதால், கடல்பரப்பில் உருவாகும் பனிபாறைகள், தாவரங்கள், காற்றின் திசை பாதைகள், மண்வள மாறுதல்கள், நீர்ப்பரப்பின் தன்மைகள், பேரிடர்களுக்கான வாய்ப்புகள் போன்றவற்றை துல்லியமாக கணிக்கும் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

❖❖❖❖❖❖

## தேசியகொடி தினம்

**தேசியகொடி அங்கீகார தினம் இன்று கொண்டாடப்படுகிறது.**

1947-ம் ஆண்டு தேசியகொடி அரசியலமைப்பு சட்டத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்டதை நினைவுகூறும் வகையில் இத்தினம் ஆண்டுதோறும் ஜுலை 22-ம் தேதி கொண்டாடப்படுகிறது.

ஒரே தேசம் ! ஒரே கொடி ! ஒருங்கிணைந்த தியாகம்! என்பதை கருப்பொருளாக கொண்டு இந்த ஆண்டு இத்தினம் கொண்டாடப்படுகிறது.

❖❖❖❖❖❖

## முதலமைச்சர்

தமிழக அரசு சார்ந்த பணிகளை மருத்துவமனையில் இருந்தபடியே தாம் தொடர்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சமூக வலைதளப்பதிவில் முதலமைச்சர் வெளியிட்டுள்ள செய்தியில் அரசின் நலத்திட்டங்களை மக்களிடையே நேரடியாக கொண்டு சேர்க்கும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் குறித்து தாம் ஆய்வு செய்ததாக குறிப்பிட்டார்.

பொதுமக்களின் மனுக்கள் மீது தீர்வு காண்பதில் தொய்வு ஏற்படக்கூடாது என அதிகாரிகளிடம் தாம் அறிவுறுத்தி இருப்பதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

## உதயநிதி

**தமிழ்நாட்டிலிருந்து அதிகளவில் விளையாட்டு** வீரர்கள் உருவாகி இருப்பதாக துணைமுதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் பள்ளி கல்வித்துறை சார்பில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சர்வதேச, தேசிய, மாநில அளவிலான பல்வேறு விளையாட்டு போட்டிகளில் பதக்கம் பெற்ற மாணாக்கருக்கு சான்றிதழ்களை வழங்கி பேசியஅவர், மாணவர்கள் படிப்பிற்கும் விளையாட்டிற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖

## தங்கம் தென்னரசு

**தமிழ்நாட்டில் பட்டாசு தொழிற்சாலை விபத்துகளில்** பெற்றோரை இழந்த தொழிலாளர்களின் 38 குழந்தைகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையாக 5 லட்சம் ரூபாய் பெருமான ஆணைகளை மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு இன்று வழங்கினார்.

பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு மாதந்தோறும் 4 ஆயிரம் ரூபாயும், ஒருவரை இழந்தவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் அரசு சார்பில் வழங்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

**சிவசங்கர்**

**தமிழ்நாட்டில் அரசு பேருந்துகளில் கட்டண உயர் கண்டிப்பாக இருக்காது** என மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பலமுறை கட்டண உயர்விற்கான சூழல் ஏற்பட்டபோதிலும் ஏழை எளிய மக்களுக்கு சுமை ஏற்றக்கூடாது என்பதற்காக கட்டண உயர்வை தவிர்ப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**மீனவர்கள்**

**கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்த** ராமேஸ்வர மீனவர்கள் 4 பேரை இலங்கை கடற்கடை கைது செய்துள்ளது.

ராமேஸ்வரத்திலிருந்து 400-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று மீன்பிடிக்கச் சென்றனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி ஒரு படகு மற்றும் 4 மீனவர்களை மன்னார் கடற்படை முகாமிற்கு இலங்கை கடற்படையினர் கொண்டு சென்றுள்ளனர்.

❖❖❖❖❖❖

**போக்குவரத்துக்கழகம்**

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகங்களில்** காலியாக உள்ள 3 ஆயிரத்து 274 ஓட்டுநர், நடத்துனர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு வரும் 27-ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு 22 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ள நிலையில் சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகம் உட்பட 15 மையங்களில் தேர்வு நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖

**திருவாரூர்**

திருவாரூர் மாவட்டத்தில் நீர் நிலைகளில் போதிய அளவு தண்ணீர் இருப்பதால் விவசாயிகள் குறுவை சாகுபடி பணியினை விறுவிறுப்பாக மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**உதகை**

உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 2ஆவது சீசனுக்காக 60 வகைகளில் 5 லட்சம் மலர் செடிகளை நடவு செய்யும் பணியினை நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இன்று துவக்கிவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**செஸ்**

ஜார்ஜியாவில் நடைபெறும் ஃபிடே மகளிர் செஸ் உலக சாம்பியன்பட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் திவ்யா தேஷ்முக் - சீனாவில் **TAN Zhongyi** ஐயும்

கொனேரு ஹம்பி - சீனாவின் **Lei Tingjie** ஐயும் இன்று எதிர்கொள்கின்றனர்.

இதில் முதல் 3 இடங்களை பிடிப்பவர்கள் மகளிர் **Candidates** போட்டிக்கு தகுதிபெறுவார்கள்.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖